RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 126 | மே.13 2026 செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# நாடு முழுவதும் மே.3ல் நடந்த நீட் தேர்வு ரத்து: தேசிய தேர்வு முகமை அறிவிப்பு

புதுடெல்லி: மே.13-

வினாத்தாள் கசிந்த விவகாரத்தின் எதிரொலியாக நாடு முழுவதும் கடந்த 3ம் தேதி (மே.3) நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறு தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மருத்துவ இளநிலை பட்டப்படிப்புக்கான நீட் தேர்வு (NEET UG 2026) கடந்த 3ம் தேதி நாடு முழுவதும் நடத்தப்பட்டது. எனினும், தேர்வுக்கு முன்பாக வினாத்தாள் கசிந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் வினாத்தாள் கசிந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக, தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேசியத் தேர்வுகளை நியாயமான, பாதுகாப்பான மற்றும் நம்பகமான முறையில் நடத்துவதில் தேசிய தேர்வு முகமை கொண்டுள்ள உறுதிப்பாட்டுக்கு இணங்க, மே 3ம் தேதி நடந்த நீட் தேர்வு தொடர்பாக எழுந்துள்ள புகார்கள் தொடர்பாக சுயாதீனமான சரிபார்ப்பு மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக மத்திய முகமைகளுக்கு தேசிய தேர்வு முகமை கடந்த 8ம் தேதி பரிந்துரை செய்திருந்தது.

மத்திய முகமைகளுடன் ஒருங்கிணைந்து தேசிய தேர்வு முகமை மேற்கொண்ட ஆய்வுத் தகவல்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளால் பகிரப்பட்ட விசாரணை முடிவுகளின் அடிப்படையில், மே 3 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட NEET (UG) 2026 தேர்வை ரத்து செய்யவும், தனியாக அறிவிக்கப்படும் தேதிகளில் அத்தேர்வை மீண்டும் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய தேர்வு முகமைக்குக் கிடைத்த தகவல்களையும், சட்ட அமலாக்க முகமைகளால் பகிரப்பட்ட விசாரணை முடிவுகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, தற்போதைய தேர்வு நடைமுறையைத் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க இயலாது என்பது உறுதியாகிறது.

இவ்விவகாரம் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்வதற்காக,



இதனை மத்தியப் புலனாய்வுத் துறைக்கு (CBI) பரிந்துரைக்க இந்திய அரசு முடிவெடுத்துள்ளது. அத்துறையின் விசாரணைக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும், உதவிகளையும் தேசிய தேர்வு முகமை வழங்கும். இந்த விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை அளிக்கும்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தேசியத் தேர்வு முகமையின் நம்பிக்கையை காக்கும் வகையிலும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேர்வு மீண்டும் நடத்தப்படுவதால், தேர்வர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் சிரமங்கள் ஏற்படும் என்பதை தேசிய தேர்வு முகமை நன்கு உணர்ந்துள்ளது. இத்தகைய பின்விளைவுகளை தேசிய தேர்வு முகமை சாதாரணமாகக் கருதவில்லை. இருப்பினும், இதற்கு மாற்றாக வேறு முடிவை எடுத்திருந்தால், அதிக தீங்குகள் ஏற்பட்டிருக்கும் என்பதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2026 மே மாதத் தேர்வுச் சுழற்சியின்போது பதிவு செய்யப்பட்ட விவரங்கள், தேர்வர்களின் தகுதி நிலை மற்றும் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட தேர்வு மையங்கள் ஆகியவை, மீண்டும் நடத்தப்படவுள்ள தேர்வுக்கும் அப்படியே எடுத்துக்கொள்ளப்படும். இதற்குப் புதிதாகப் பதிவு செய்யத் தேவையில்லை. கூடுதல் தேர்வுக்கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது. இத்தேர்வு தேசிய தேர்வு முகமையின் வளங்களைப் பயன்படுத்தி மீண்டும் நடத்தப்படும்.

மீண்டும் நடத்தப்படவுள்ள தேர்வுத் தேதிகள் மற்றும் மீண்டும் வெளியிடப்படவுள்ள நுழைவுச்சீட்டு (Admit Card) குறித்த கால அட்டவணை உள்ளிட்ட மேலதிகத் தகவல்கள், முகமையின் அதிகாரப்பூர்வ வழிமுறைகள் வாயிலாக வெளியிடப்படும். தேர்வர்கள் மற்றும் பெற்றோர்கள் இவ்வதிகாரப்பூர்வ வழிமுறைகளை மட்டுமே சார்ந்திருக்குமாறும், சமூக ஊடகங்களில் பரவிவரும் சரிபார்க்கப்படாத தகவல்களைப் புறக்கணிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிவு விவகாரம்: 2026 27ம் ஆண்டு எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கைக்காக கடந்த மே 3ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வில் கேட்கப்பட்ட 200 வினாக்களில் 80%க்கும் கூடுதலான வினாக்கள் தேர்வுக்கு பல நாள்கள் முன்பே ராஜஸ்தானில் வெளியாகி விட்டதாகவும், இது தொடர்பாக அம்மாநில காவல்துறை வழக்குப் பதிவு செய்து விசாரிப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

மருத்துவம் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் சார்ந்த விஷயத்தில் தேசிய தேர்வு முகமை தொடர்ந்து அலட்சியமாக நடந்து கொள்வதாக அரசியல் கட்சிகளின் விமர்சனங்களும் எழுந்தன.

இந்நிலையில், வினாத்தாள் கசிந்ததால் கடந்த 3ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறு தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. ஆனால், மறுதேர்வுக்கான தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# "சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின் குரல் அதிகம் ஒலிப்பதை உறுதி செய்க" : ஸ்டாலின்

சென்னை: மே.13-

தமிழ்நாடு சட்டப்பேரவையின் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.சி.டி. பிரபாகருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சிகளின் குரல் சட்டப்பேரவையில் அதிகம் ஒலிப்பதை சபாநாயகர் உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.





இது தொடர்பாக முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.சி.டி. பிரபாகருக்கும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரவிசங்கருக்கும் எனது வாழ்த்துகள்.

மிகப் பெரும் ஆளுமைகளால் பெருமை பெற்ற பொறுப்பில் அமர்ந்துள்ள இருவரும், அந்த மரபினையும், பேரவையின் மாண்புகளையும் காத்திட வேண்டும்.

ஆளும்கட்சியாக இருக்கும் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட, சட்டமன்றத்தில் மற்ற கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் அதிகம். அதுதான் இந்த முறை மக்களின் தீர்ப்பு!

அதை மதித்து, எதிர்க்கட்சிகளின் குரல் சட்டமன்றத்தில் அதிகம் ஒலிப்பதை உறுதிசெய்யும் வகையில் அப் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இருவரும் அவையை வழிநடத்துவார்கள் என நம்புகிறேன்" என தெரிவித்துள்ளார்.

# அமமுகவில் இருந்து காமராஜ் எம்எல்ஏ நீக்கம் தவெகவை ஆதரித்ததால் தினகரன் நடவடிக்கை

சென்னை: மே.13-

'தவெகவுக்கு தன்னிச்சையாக ஆதரவளித்துள்ள அமமுகவின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காமராஜ், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காமராஜ், கட்சியின் நிலைப்பாட்டினை மீறி நேற்று சட்டப்பேரவையில் தன்னிச்சையாகத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருப்பது கட்சியின் குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணானது.

எஸ்.காமராஜின் இன்றைய செயல்பாடு, அவரின் வெற்றிக்காகப் பாடுபட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும், அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மன்னார்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இழைத்திருக்கும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

ஆகவே, கட்சியின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், எஸ்.காமராஜ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் இன்று முதல் நீக்கி வைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# மதுக்கடைகளை மூடும் முதல்வர் விஜய்யின் உத்தரவு: அரசியல் தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மே.13-

பொதுமக்களுக்கு இடையூராக இருக்கும் 717 மதுபான விற்பனைக் கடைகள் மூடும் முதல்வர் விஜய்யின் நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பில் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் 4,765 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. அதில், வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகில் இருந்து 500 மீட்டர் வரை அமைந்துள்ள கடைகளை ஆய்வு செய்து கண்டறியுமாறு முதல்வர் விஜய் உத்தரவிட்டார்.

மேலும், பொதுமக்கள் நலனைக் கருத்தில்கொண்டு வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் என மொத்தம் 717 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அடுத்த இரண்டு வாரத்துக்குள் மூட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதனிடையே, முதல்வராக விஜய்யின் நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன்: "குடிநோய் மற்றும் போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை, அப்பழக்கங்களில் இருந்து மீட்பதற்கான இலவச சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை மாவட்டந்தோறும் உருவாக்கிட வேண்டும். மேலும், மூடப்படும் டாஸ்மாக் கடைகளில் 23 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் 3500 டாஸ்மாக் பணியாளர்கள் வேலை வாய்ப்பையும், அவர்களது குடும்பங்கள் வாழ்வாதாரத்தையும் உறுதி செய்ய வேண்டும்." என்றார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்: மது மற்றும் போதையில்லாத தமிழ்நாடு அமைக்கப்பட்டால், அதை விட பெரும் மகிழ்ச்சியை மக்களுக்கு அளிக்க முடியாது. அந்த இலக்கை நோக்கி முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பயணிக்க வேண்டும். அதற்கான அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாமக முழுமையான ஆதரவை வழங்கும். என்றார்.

தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன்: "717 மதுபானக் கடைகளை மூடுவதற்கு பதிலாக அனைத்து மதுக் கடைகளையும் மூடி, தமிழ்நாட்டை மது இல்லாத மாநிலமாக்க உத்தரவிட வேண்டும் என வலியுறுத்துகிறேன். என்றார்.

எஸ்டிபிஐ கட்சி மாநிலத் தலைவர் முகம்மது முபாரக்: மது உள்ளிட்ட போதை அரக்கனின் பிடியில் சிக்கித் தவிக்கும் தமிழக இளைஞர்களையும், அதன் விளைவாகச் சீரழியும் ஏழைக் குடும்பங்களையும் பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, தற்போது எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை ஒரு தொடக்கமாகக் கொண்டு, தமிழகத்தில் படிப்படியாகப் பூரண மது விலக்கை அமல்படுத்தும் உன்னத இலக்கை நோக்கி அரசு உறுதியுடன் நடைபோட வேண்டும் என எஸ்டிபிஐ கட்சி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். என்றார்.

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்: மதுபானம் விற்பனை ஓர் அரசாங்கத்தின் பணியாக என்றுமே இருக்கக் கூடாது; மதுப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பைத் தான் அரசு கைகொள்ள வேண்டும். இந்த நிலையை நோக்கி தமிழக அரசு நகர வேண்டும். இன்று 717 மதுக்கடைகள் மூடல் என்று தொடங்கியிருக்கிறது. இந்த எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும். இந்த நடவடிக்கை தொடரப் பட வேண்டும். வாழ்த்துகள். என்றார்.

# அசாம் முதல்வராக பதவியேற்றார் ஹிமந்த பிஸ்வா சர்மா : பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்பு

குவாஹாட்டி: மே.13-

அசாம் முதல்வராக ஹிமந்த பிஸ்வா சர்மா நேற்று பதவியேற்றார். அவருடன் மேலும் 4 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

நடந்து முடிந்த அசாம் சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் (என்டிஏ) கூட்டணி, மொத்தம் உள்ள 126ல் 101 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. இதில், பாஜக 81 இடங்களிலும், அதன் கூட்டணி கட்சிகளான போடோலாந்து மக்கள் முன்னணி மற்றும் அசாம் கன பரிஷத் ஆகியவை தலா 10 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. இதன் மூலம் மூன்றில் இரண்டு பங்கு வெற்றியைப் பெற்ற இக்கூட்



டணி தொடர்ந்து 3வது முறையாக ஆட்சியைப் பிடித்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் குவாஹாட்டியில் நடைபெற்ற என்டிஏ எம்எல்ஏக்கள் கூட்டத்தில், சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஹிமந்த பிஸ்வா சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யாவை சந்தித்த ஹிமந்த பிஸ்வா சர்மா, ஆட்சி அமைக்க உரிமை கோரினார். இதை ஏற்றுக் கொண்ட ஆளுநர் ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில், ஹிமந்த பிஸ்வா சர்மா 2வது முறையாக முதல்வராக நேற்று பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யா பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அவருடன், பாஜகவைச் சேர்ந்த ரமேஷ்வர் தெலி, அஜந்தா நியோக் ஆகியோரும், அசாம் கன பரிஷத்தைச் சேர்ந்த அதுல் போரா, போடோலாந்து மக்கள் முன்னணியைச் சேர்ந்த சரண் போரா ஆகிய 4 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

பவியேற்பு விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், பல்வேறு மாநிலங்களின் முதல்வர்கள், துணை முதல்வர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வாட்ஸ்அப்பில் அழைப்பிதழை பதிவிறக்கியதால் ரூ.5 லட்சம் இழந்த பெங்களூரு தொழிலதிபர்

பெங்களூரு:மே. 13-

பெங்களூருவை சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தனக்கு வாட்ஸ்அப்பில் வந்த திருமண அழைப்பிதழை பதிவிறக்கம் செய்துள்ளார். உடனே அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.5 லட்சம் பறிபோனது. பெங்களூருவைச் சேர்ந்தவர் நூர் நஹீத் கான் (42). தொழிலதிபரான இவருக்கு நேற்று முன் தினம் வாட்ஸ்அப்பில் திருமண அழைப்பிதழ் வந்துள்ளது. அந்த குறுஞ்செய்தியில், "எங்கள் திருமணத்திற்கு உங்களை அழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். விழாவின் முழு விவரங்களுக்கு, இணைக்கப்பட்டுள்ள அழைப்பிதழைப் பதிவிறக்கம் செய்யவும்" என்று எழுதப்பட்டிருந்து.இதையடுத்து நூர் நஹீத் கான் அந்த இணைப்பில் ஏபிகே கோப்பு வடிவில் இருந்த அழைப்பிதழை பதிவிறக்கம் செய்தார். உடனடியாக அவரது செல்போனில் ஒரு செயலி நிறுவப்பட்டு, வங்கிக் கணக்கில் இருந்து ரூ.5 லட்சத்து 440 எடுக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தது.இதையடுத்து அவர் பெங்களூரு இணைய குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில், தகவல் தொழில்நுட்பச் சட்டம், பிஎன்எஸ் சட்டப் பிரிவுகளின் கீழ் அடையாளம் தெரியாத நபர்கள் மீது மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.



# மேற்கு வங்க முதல்வரின் உதவியாளர் கொலை வழக்கு: பிஹார், உ.பி.யைச் சேர்ந்த மூவர் கைது



கொல்கத்தா:மே. 13-

மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளர் சந்திரநாத் ரத் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பிஹார் மற்றும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று கூலிப்படையினரை சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்துள்ளது.

பிஹாரின் பக்சர் பகுதியில் மயங்க் ராஜ் மிஸ்ரா மற்றும் விக்கி மௌரியா ஆகியோரும், உ.பி.யின் பலியா மாவட்டத்தில் ராஜ் சிங் என்பவரும் பிடிபட்டனர். இவர்களில் ராஜ் சிங் மீது ஏற்கெனவே 15க்கும் மேற்பட்ட கொலை வழக்குகள் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

முன்னாள் விமானப் படை வீரரும், மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரியின் தனி உதவியாளருமான சந்திரநாத் ரத், கடந்த மே 6ஆம் தேதி இரவு தனது காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, மத்தியம்கிராம் பகுதியில் மர்ம நபர்களால் வழிமறித்துச் சுடப்பட்டார். சுமார் ஏழு கிலோமீட்டர் தூரம் துரத்தி வரப்பட்ட அவரது காரை தடுத்து நிறுத்திய கும்பல், அவர் மீது ஐந்து முறை துப்பாக்கியால் சுட்டது.இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சந்திரநாத் ரத்தின் காரை ஓட்டி வந்த புத்ததேவ் பேரா மூன்று குண்டுகள் பாய்ந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேற்கு வங்கத்தில் 15 ஆண்டுகால திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தி பாஜக வெற்றி பெற்ற இரண்டே நாட்களில் இந்தக் கொலை நடந்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தனது உதவியாளர் என்பதால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே அவர் கொல்லப்பட்டதாக சுவேந்து அதிகாரி குற்றம் சாட்டினார். பாஜக தலைவர்கள் இதற்கு திரிணமூல் காங்கிரஸே காரணம் என்று கூறி வரும் நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சி இந்த வழக்கில் சிபிஐ விசாரணை கோரியுள்ளது. கைது செய்யப்பட்ட மூவரும் திங்கள்கிழமை பாராசாத் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை 13 நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இவர்கள் மூவரும் கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதியாகியுள்ள நிலையில், இவர்களை ஏவிவிட்ட முக்கியக் குற்றவாளிகள் யார் மற்றும் கொலையின் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்துத் தனிப்படை போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "தங்கம் வாங்காதீர், வீட்டில் இருந்து வேலை செய்வீர் என்ற பிரதமர் மோடியின் கோரிக்கை அரசின் தோல்விக்கான சான்று" ராகுல்

புதுடெல்லி:மே. 13-

தங்கம் வாங்காதீர், வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதியுங்கள் என்பன உள்ளிட்ட பிரதமர் மோடியின் கோரிக்கை தோல்விக்கான சான்று என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: பொது மக்கள் சில தியாகங்களை செய்ய வேண்டும் என பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.தங்கம் வாங்காதீர்கள், வெளிநாடு செல்லாதீர்கள், பெட்ரோலை குறைவாகப் பயன்படுத்துங்கள், உரம் மற்றும் சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளுங்கள், மெட்ரோவைப் பயன்படுத்துங்கள், வீட்டிலிருந்தே வேலை செய்யுங்கள் என அவர் வலியுறுத்தி உள்ளார். இவை வெறும் போதனைகள் அல்ல, மத்திய அரசின் தோல்விக்கான சான்று.கடந்த 12 ஆண்டுகளில் அவர் நாட்டை இத்தகைய நிலைக்குக் கொண்டு வந்துள்ளார். இப்போது மக்களிடம் எதை வாங்க வேண்டும், எதை வாங்கக்கூடாது, எங்கே செல்ல வேண்டும், எங்கே செல்லக்கூடாது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு முறையும், அவர்கள் பிரச்சினைக்கு பொறுப்பு ஏற்பதற்கு பதில் அதிலிருந்து தப்பிப்பதற்காகப் பொறுப்பை மக்கள் மீது மாற்றுகிறார்கள். இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

# கரும்பு காட்டில் பெண் கழுத்தறுத்து கொலை

குளித்தலை:மே. 13-

குளித்தலை அருகே கரும்புக்காட்டில் பெண் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடந்தார். கரூர் மாவட்டம் குளித்தலை அடுத்த தெற்கு மேலப்பட்டியை சேர்ந்தவர் சுரேஷ்(50). இவரது மனைவி சிவரஞ்சனி(40). இவர்களது மகன் விகாஷ்(23). சுரேஷ் திருச்சியில் பழக்கடையில் விற்பனையாளராகவும், விகாஷ் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்திலும் வேலை பார்த்து வருகின்றனர். இருவரும் 15 நாள் அல்லது மாதம் ஒருமுறை வீட்டுக்கு வருவார்கள்.இதனால் சிவரஞ்சனி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்தார். இந்நிலையில் இன்று காலை நீண்டநேரமாகியும் சிவரஞ்சனியின் வீட்டு கதவு திறக்கப்படவில்லை. இதனால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர், உறவினர்கள் அவரது வீட்டுக்கு சென்று பார்த்தபோது வீட்டில் அவர் இல்லை. உடனே மற்ற உறவினர்களுக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து உறவினர்கள் அங்கு திரண்டு அவரை தேடினர். அப்போது அவரது வீட்டிலிருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள கரும்பு காட்டில் சிவரஞ்சனி கழுத்தறுக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டு கிடந்தார்.தகவலறிந்து வந்த குளித்தலை போலீசார் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குளித்தலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சிவரஞ்சனி அணிந்திருந்த தோடு, செயின் உள்ளிட்ட நகைகள் எதுவும் திருட்டு போகவில்லை. இதேபோல் வீட்டில் திருட்டு நடந்ததற்கான அறிகுறி இல்லை. எனவே கள்ளக்காதல் விவகாரத்தில் அவர் கொலை செய்யப்பட்டாரா என போலீசார் சந்தேகிக்கின்றனர்

# நீலகிரி மாவட்டம் கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் சார்பில் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை மனு

கூடலூர் மே. 13-

தமிழக அரசு சேவை பெறும் உரிமை சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் தமிழ்நாடு முதலமைச்சர் ஜேசப்விஜய் அவர்களுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் பொதுமக்கள் அரசு அலுவலகங்களில் அன்றாடம் எதிர்கொள்ளும் காலதாமதம், நிர்வாக அலட்சியம், தேவையற்ற அலைச்சல், லஞ்ச கோரிக்கை போன்ற பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாக "சேவை பெறும் உரிமை சட்டம்" (Right to Public Services Act) என்ற வலுவான சட்டத்தை தமிழகத்தில் கொண்டு வர வேண்டும். இன்றைய சூழலில், பொதுமக்கள் சாதி சான்று, வருமானச் சான்று, பட்டா மாற்றம், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை, மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு, சமூக நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட அடிப்படை அரசு சேவைகளை பெற பலமுறை அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. பல நேரங்களில் மனுக்கள் எந்த காரணமும் கூறாமல் நீண்ட நாட்கள் நிலுவையில் வைக்கப்படுகின்றன.குறிப்பாக மனு பெற்றுக் கொண்டும் ரசீது வழங்காத நிலை, "பிறகு வாருங்கள்" என்று தொடர்ந்து அலைய விடுதல், கோப்புகளை தேவையின்றி தாமதப்படுத்துதல், அதிகாரிகள் நேரடி பதில் வழங்காமல் தவிர்த்தல், வாய்மொழி மறுப்பு வழங்குதல், சில இடங்களில் லஞ்சம் இல்லாமல் சேவை கிடைக்காத சூழல், ஆன்லைன் விண்ணப்பங்களுக்கும் சரியான காலக்கெடு இல்லாமை போன்ற பல பிரச்சினைகள் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றன. இந்த நிலையை மாற்றுவதற்காகவே இந்தியாவின் பல மாநிலங்களில் "சேவை பெறும் உரிமை சட்டம்" வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

முதன்முதலில் மத்தியப் பிரதேசம் 18.08.2010 அன்று இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அதனைத்தொடர்ந்து பீகார், டெல்லி, பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், கேரளா உள்ளிட்ட பல மாநிலங்கள் இந்த சட்டத்தை கொண்டு வந்துள்ளன.

இந்த சட்டத்தின் மூலம் அரசு சேவையை மக்களின் சட்ட உரிமையாக மாற்றுவதாகும்.இந்த சட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டால், அரசு அலுவலக சேவைகளுக்கு குறிப்பிட்ட காலவரையறை நிர்ணயம் செய்யப்படும். உதாரணமாக: சாதி சான்று – 15 நாட்கள், வருமானச் சான்று 7 நாட்கள், பட்டா மாற்றம் – 30 நாட்கள், சிட்டா / அடங்கல் நகல் – 7 நாட்கள், முதியோர் ஓய்வூதிய மனு – 30 நாட்கள் என ஒவ்வொரு சேவைக்கும் காலக்கெடுவுடன் வழங்கப்படலாம்.மேலும், ஒவ்வொரு சேவைக்கும் பொறுப்பான அதிகாரி நியமிக்கப்படுவார். மனு அளித்தவுடன் ரசீது மற்றும் கண்காணிப்பு எண் வழங்குவது கட்டாயமாகும். சேவை வழங்க மறுத்தால், அதிகாரி எழுத்துப்பூர்வ காரணம் தெரிவிக்க வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் பொதுமக்களுக்கு மேல்முறையீட்டு உரிமை வழங்கப்படும். காரணமின்றி தாமதப்படுத்தும் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும். தேவையான சூழலில் பொதுமக்களுக்கு இழப்பீடும் வழங்கப்படும். அனைத்து சேவைகளும் டிஜிட்டல் கண்காணிப்பு முறையில் கொண்டு வரப்படும்.தமிழகத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் e-Sevai, TNeGA, ஆன்லைன் வருவாய் சேவைகள் போன்ற அமைப்புகளுடன் இந்த சட்டம் இணைக்கப்பட்டால் நிர்வாக வெளிப்படைத் தன்மை மேலும் வலுப்பெறும். இந்த சட்டம் அமலுக்கு வந்தால், பொதுமக்களின் அலையாட்டம் குறையும், லஞ்சம் குறைய வாய்ப்பு அதிகரிக்கும், நிர்வாக பொறுப்புணர்வு உயரும், அரசு சேவைகள் விரைவாக கிடைக்கும், கிராமப்புற மக்களும் பயனடைவார்கள், டிஜிட்டல் நிர்வாகம் வலுவடையும், அரசு மீதான மக்களின் நம்பிக்கை அதிகரிக்கும். குறிப்பாக வருவாய் துறை, உள்ளாட்சி துறை, சமூக நலத்துறை, மின்சார வாரியம், குடிநீர் வாரியம் போன்ற மக்கள் தொடர்பு அதிகமுள்ள துறைகளில் இந்த சட்டம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்."அரசு சேவை என்பது தயவு அல்ல; மக்களின் உரிமை" என்ற புதிய நிர்வாக பண்பாட்டை தமிழகத்தில் உருவாக்க தங்களின் தலைமையிலான அரசு முன்வரும் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு "தமிழ்நாடு சேவை பெறும் உரிமை சட்டம்" என்ற பெயரில் விரைவாக சட்டம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த வேண்டும். என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

# கோடை கால உணவினை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகர்கள் பின்வரும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்

தேனி.மே. 13-

தேனி மாவட்டத்தில் தற்பொழுது கோடை காலம் துவங்கிவிட்டதால், பொதுமக்களுக்கு பதநீர், இளநீர், கம்மங்கூல், பழரசம், சர்பத், கரும்பு ஜீஸ், கூல்டிரிங்ஸ் (Carbonated Drinks), மில்க் ஷேக், மோர் மற்றும் இவை போன்ற பல திரவ ஆகாரங்களின் தேவைகள் அதிகமாகும். மேலும் இவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுப்புது உணவு வணிகர்கள் உருவாக வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மேலும் திரவ ஆகாரங்கள் பெரும்பாலும் தண்ணீர் அடிப்படையிலானது என்பதினால், தொற்றுநோய்களின் தாக்கத்திற்கு சிறிது வாய்ப்பு உள்ளது. மேற்கூறிய திரவ ஆகாரங்களை மிகவும் பாதுகாப்பாக உற்பத்தி செய்து, அவற்றை பாதுகாப்பான சூழலில் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய கடமை உணவு வணிகர்களுக்கு உள்ளது. எனவே, கோடை கால உணவினை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வணிகர்கள் பின்வரும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வணிகர்களின் கவனத்திற்கு அனைத்து உணவு வணிகர்களும் உணவு பாதுகாப்புத்துறையின் உரிமம் அல்லது பதிவுச் சான்றிழை (https://foscos.fssai.gov.in) என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழைப் பெற்ற பின்னரே உணவு வணிகம் ஆரம்பிக்க வேண்டும்.

"பழரசம், சர்பத், கம்மங்கூல் போன்ற திரவ ஆகாரங்களைத் தயாரிக்கப் பயன்படும் தண்ணீர் பாதுகாப்பானதாகவும், நன்னீராகவும் இருக்க வேண்டும். மேலும் உற்பத்தியாளர்கள் பயன்படுத்தும் தண்ணீரின் தரத்தினை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துறையின் பகுப்பாய்வுக்கூடம் அல்லது ழிகிஙிலி அங்கீகாரம் பெற்ற தனியார் பகுப்பாய்வுக்கூடங்களில் பகுப்பாய்வு செய்து,



அதன் அறிக்கையை வைத்திருக்க வேண்டும். உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் பில் வைத்திருக்க வேண்டும். திரவ ஆகாரங்களைத் தயாரித்து, அதற்கேற்ற வெப்பநிலையில் வைத்திருக்க வேண்டும்.

மேலும், கரும்பு ஜீஸ் உள்ளிட்ட அவ்வப்போது உடனடியாக விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களைத் தயாரித்த பின்னர் 2லு மணி நேரத்திற்கு மேலாக இருப்பு வைத்திருக்கக் கூடாது. கம்மங்கூல் போன்ற உணவுப் பொருட்கள் கடையை மூடும் வரை விற்பனையாகாமல் மீதமானால் அவற்றை அப்புறப்படுத்திடல் வேண்டும். திரவ ஆகாரங்களைத் திறந்த நிலையில் ஈக்கள் மற்றும் பூச்சிகள் மொய்க்கும் வகையில் விற்பனை செய்யக்கூடாது. திரவ ஆகாரங்களை குளிரூட்ட, உணவுத் தர "ஐஸ் கட்டியைப்" பயன்படுத்த வேண்டும். உணவுத் தர ஐஸ் கட்டி செயற்கை வண்ணம் கலக்காமலும், உணவுத் தரமில்லாத ஐஸ் கட்டி "நீல நிறத்திலும்" இருக்கும்.ஐஸ் பெட்டிகள் கழுவி சுத்தமாக இருக்கிறதா என உறுதி செய்து, ஐஸ்கட்டிகள் சுகாதாரமான முறையில் கையாளப்படுக்கிறதா என்பதை உரிமையாளர் கவனிக்க வேண்டும். ஐஸ் கட்டிகளை வைக்கோல், சணல் பை போன்றவை கொண்டு சுகாதாரமற்ற முறையில் மூடி வைத்திருத்தல் கூடாது. பழரசம் தயாரிக்கப் பயன்படும் பழங்கள் புதியதாகவும், தரமானதாகவும் இருத்தல் வேண்டும். அழுகிய பழங்களை பழரசம் தயாரிக்கப் பயன்படுத்தக்கூடாது. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயற்கை நிறமி கலந்த சர்பத், கூல்டிரிங்ஸ் (Carbonated Drinks) போன்றவை தவிர, உடனுக்குடன் பரிமாறும் வகையில் தயாரிக்கப்படும் எந்த திரவ உணவுப் பொருளிலும் செயற்கை வண்ணங்களை கலக்கக்கூடாது.

திரவ ஆகாரங்களைத் தயாரிப்பில் ஈடும் பணியாளர்கள் மற்றும் கையாளும் பணியாளர்கள் அனைவரும் தன்சுத்தம் பேணி, கையுறை போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்திருக்க வேண்டும். அவர்கள்"தொற்றுநோய்த் தாக்கமற்றவர்" என்பதிற்கு மருத்துவச் சான்று வைத்திருக்க வேண்டும். பதநீரைக் கொள்முதல் செய்து, அது கெட்டுப்போகும் முன்னர் விற்பனை செய்திடல் வேண்டும். குறிப்பாக பதநீர் இறக்கிய 67 மணி நேரத்திற்குள் விற்பனை செய்திடல் வேண்டும்.

சுத்திகரிக்கப்பட்டு பாட்டிலில் அடைக்கப்பட்ட குடிநீர் பாட்டில்களை வெயில் படாதவாறு பாதுகாக்க வேண்டும். கடையும், அதன் சுற்றுப்புறமும் ஈக்கள், பூச்சிகள் இல்லாமலும், குப்பைகள் இல்லாமலும், சுகாதாரமாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும். கூழ், மோர், பால், தண்ணீர் போன்றவை துருப்பிடிக்காத சுத்தமான பாத்திரங்களில் வைத்திருக்கப்பட வேண்டும். பழங்கள் சூரியஒளி / வெப்பம் படும் வகையில் இருந்தால் தரமும், சுவையும் மாறுபட்டு, சீக்கிரம் அழுகிவிடும் தன்மையுடையவை என்பதால் பழங்கள் சூரிய ஒளி / வெப்பம் படாதவாறு, குளிர்பெட்டி (Chill box) அல்லது குளிர்சாதன பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.

பழரசம், குளிர்பானங்களில் உபயோகப்படுத்தப்படும் சர்க்கரை, சர்க்கரை பாகு முதலியவை தண்ணீர் மற்றும் தூசி படாதவாறு மூடி வைத்து, தனியான தேக்கரண்டி கொண்டு சுகாதாரமான முறையில் கையாளப்பட வேண்டும். சாறு எடுக்க பயன்படுத்தும் மிக்ஸி, ஜீசர், வடிகட்டி போன்றவை துருபிடிக்காமலும், து□ய்மையாகவும் இருக்க வேண்டும். பழரசம், குளிர்பானம், மோர் போன்றவற்றை பாத்திரங்களிலிருந்து கைப்படாத வண்ணம் எடுக்க, நீளமான கரண்டி உபயோகப்படுத்துவதை உறுதி செய்து கொள்ளவும். பழச்சாறு, குளிர்பானங்களை பருக பயன்படுத்தும் ஸ்டராக்கள் (Straw) உணவுத் தரம் வாய்ந்ததாகவும், தூசி படாமலும், ஈக்கள் மொய்க்காமலும் மூடி வைக்கப்பட்டிருக்க வேண்டும். திரவ ஆகாரங்களை உணவு தரமற்ற மற்றும் மறுசுழற்சி (Recycled) செய்யப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கப்களிலும், பைகளிலும் வழங்கக்கூடாது. மூடியுடன் கூடிய குப்பை தொட்டிகளை உபயோகிக்க வேண்டும். நுகர்வோர்களின் கவனத்திற்கு

கடையில் உணவு பாதுகாப்பு உரிமம் உள்ளதா என்பதை உறுதி செய்யவும், அவ்வாறு உணவு பாதுகாப்பு உரிமம் இல்லையெனில் அக்கடையில் எவ்வித உணவுப் பொருளையும் வாங்கக்கூடாது. பழரசம் / ப்ரூட் சாலட் செய்ய பயன்படுத்தும் பழங்கள் அழுகும் நிலையில் இருந்தால், அவைகளை தவிர்க்கவும். சர்பத் மற்றும் குளிர்பானங்களில் அங்கீகரிக்கப்படாத நிறங்கள் சேர்க்கப்பட்டிருந்தல், அதனை வாங்குவதை தவிர்க்கவும். குளிர் பானங்கள், பழரசங்கள் நேரடியாக குளிர்பெட்டியிலிருந்து பெறுவது நல்லது. உணவு வணிகர் ஐஸ்கட்டிகள் போட்டு தரும் குளிர்பானங்களையும், பழச்சாறுகளையும் வாங்கும் முன்னர், ஐஸ்கட்டிகள் உணவுத் தரம் வாய்ந்தவையா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

திறந்த நிலையில் உள்ள எந்த வகை திரவ ஆகாரங்களையும் நுகர்வோர் தவிர்க்க வேண்டும். நுகர்வோர்கள் கோடை காலத்தில் அதிக அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாதுகாப்பான திரவ ஆகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். தங்களது கலோரியின் தேவைக்குட்பட்டு பாட்டிலில் அடைக்கப்பட்ட கர்பனேற்றம் செய்யப்பட்ட கூல்டிரிங்ஸ் (Carbonated Drinks) போன்றவற்றை மிகவும் குறைவான அளவுடன் எடுத்துக் கொண்டு, பழரசம், இளநீர், பதநீர், கரும்பு ஜீஸ், கூழ் வகைகள் போன்ற இயற்கை திரவ ஆகாரங்களை அதிகளவில் எடுத்துக் கொள்ள வேண்டும். பொட்டலமிடப்பட்ட திரவ ஆகாரங்களின் பாக்கெட்டுகளில் தயாரிப்புத் தேதி, காலாவதி நாள் உள்ளிட்ட அனைத்து லேபிள் விபரங்களும் உள்ளதா என்பதை கவனித்து வாங்க வேண்டும். காரம் மிகுந்த மற்றும் அதிகம் சூடான உணவு வகைகளை அதிகம் எடுத்துக் கொள்ளக் கூடாது. நுகர்வோர் வாங்கும் திரவ உணவுப் பொருட்களின் தரத்தில் குறைபாடோ அல்லது அவற்றை விற்பனை செய்யும் கடையில் சுகாதாரக் குறைபாடோ காணப்பட்டால், 94440 42322 என்ற உணவு பாதுகாப்புத் துறையின் வாட்ஸ்அப் புகார் சேவை எண்ணிற்கு புகார் அளிக்கலாம் 6ஜி60ஜி மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

## தேனி மாவட்டம்மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 114 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி மே.13-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 114 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 114 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள்



விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தர விட்டார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத்பீடன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர். ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) .கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் கவிதா, உட்பட அரசு அலுவ லர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

திருப்பத்தூர்.மே.13-

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மேல் அச்சமங்கலம் பகுதியை சேர்ந்த செல்வன் செ.முகுந்தன் (வயது 12), செ. கீர்த்திகா (வயது 11) த/பெ செல்வகுமார் ஆகிய இருவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் நடைபெற்ற ஸ்கேட்டிங் விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் (under 14) மற்றும் (under11) ஆகிய பிரிவுகளின் முதல் பரிசு பெற்று, தேசிய அளவில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கு கலந்து கொள்ள உள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் சமூக பங்களிப்பு (CSR) நிதியிலிருந்து, தலா ரூ.32,025/ மதிப்பிலான ஸ்கேட்டிங் ஷூகளை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் (11.05.2026) அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தமிழ்நங்கை, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், மாவட்ட பழங்குடியினர் நலதிட்ட அலு வலர் செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி வளாகத்தில், வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட தனியார் பள்ளிகளின் வாகனங்களை ஆய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி..இ.ஆ.ப., (12.05.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் அஜிதாபேகம், வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வெங்கடராகவன், வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர், மோட்டார் வாகன ஆய்வாளர் அன்புச்செழியன், காவல்துறை, பள்ளிக்கல்வித்துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

உதகை மே.13-

தமிழ்நாடு அரசின் பல்வேது றைகளில பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள ஓய்வூதிய தாரர்களுக்கு ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் எதிர்வரும் 12.06.2026 வெள்ளிகிழமை காலை 10.30 மணிக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே, 31.12.2025க்கு முன்னர் ஓய்வு பெற்று நாளதுவரை ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதியப் பலன்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது குறைகள் பற்றிய விண்ணப்பங்களை இரட்டைப் பிரதிகளில் தயார் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (கணக்குகள்) அவர்களுக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வருகின்ற 15.05.2026க்கு முன்னர் அனுப்பி வைப்பதோடு சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடு?விவசாயிகள் குற்றச்சாட்டு

பெரம்பலூர், மே.13-

அரியலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருவதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.மஞ்சமேடு, திருமழப்பாடி, இளந்தங்கூடம், கண்டிராதீர்த்தம், மேலவரப்பான்குறிச்சி, ஏலாக்குறிச்சி மற்றும் கரைவெட்டி உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் நெல் கொள்முதல் நிலையங்களில், ஒரு மூட்டைக்கு ரூ.40 முதல் ரூ.50 வரை அதிகாரப்பூர்வமற்ற கட்டணம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.ஒரு நிலையத்தில் ஒரு சீசனுக்கு



சுமார் 600 முதல் 700 டன் வரை நெல் கொள்முதல் செய்யப்படுவதால், 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மூட்டைகள் கையாளப்படுகின்றன. இதன் மூலம் ஒரு சீசனில் மட்டும் ரூ.6.5 லட்சம் முதல் ரூ.8.3 லட்சம் வரை வசூலிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.மேலும், நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பி.சி.க்கள் நேரடியாக பணம் பெறாமல், அங்கு பணிபுரியும் மூட்டை தூக்கும் கூலி தொழிலாளர்கள் மூலம் பணம் வசூலித்து வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பல மையங்களில் சாக்கு மூட்டைகள் போதுமான அளவில் வழங்கப்படாததால், விவசாயிகள் தங்களே மூட்டைகள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மழைக்காலங்களில் நெல் பாதுகாப்பிற்கு தேவையான தார்பாய்கள் இல்லாததால், திறந்தவெளியில் வைக்கப்படும் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைகின்றன. தொடர்ந்து பெய்து வரும் மழையால் நெல் முளைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், தரம் குறைவதால் அரசு கொள்முதல் மறுப்பது அல்லது குறைந்த விலைக்கு ஏற்கப்படுவது போன்ற பிரச்சனைகளும் ஏற்படுவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.மேலும், நனைந்த நெல்லை உலர்த்த போதிய வசதிகள் இல்லாததால் கூடுதல் செலவு ஏற்படுவதாகவும், சில இடங்களில் நெல் நீண்ட நாட்கள் கிடப்பில் இருப்பதால் தரம் மேலும் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.எனவே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு சட்டவிரோத கட்டண வசூலை தடுக்கவும், சாக்கு மூட்டைகள் மற்றும் தார்பாய்கள் போதுமான அளவில் வழங்கவும், சேமிப்பு மற்றும் உலர்த்தும் வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பெட்ரோல், டீசல் விலை உயர்கிறதா? அதிரடி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் மத்திய அரசு

புதுடெல்லி:மே.13-

மேற்கு ஆசியப் போர் சூழலால் ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்க, பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்துவது உள்ளிட்ட சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் ஆலோசித்து வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ள போதிலும், இந்தியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெட்ரோல் மற்றும் டீசல் விலை மாற்றமில்லாமல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு மாதம் சுமார் ரூ.30,000 கோடி வருவாய் இழப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது."சர்வதேச சந்தையில் அதிக விலைக்கு வாங்கி, உள்நாட்டில் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால் நிறுவனங்களின் நிதிநிலை பெரும் நெருக்கடியில் உள்ளது" என்று பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா விளக்கமளித்துள்ளார். இறக்குமதி செய்யப்படும் எரிபொருளின் தேவையைக் குறைப்பதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் கட்டாயமாக்கப்படலாம்



என தெரிகிறது:விலை உயர்வு: பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்துவதன் மூலம் அதன் தேவையைக் கட்டுப்படுத்துதல். வீட்டிலிருந்தே வேலை: அலுவலக ஊழியர்களில் 50% பேரை வீட்டிலிருந்தே வேலை செய்யப் பணித்தல். பொதுப் போக்குவரத்து: அரசு அதிகாரிகள் மெட்ரோ மற்றும் பேருந்து சேவைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல். ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் உலகளாவிய எரிசக்தி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதே போன்ற சூழலில் ஹாங்காங், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் எரிபொருள் விலையை 2030% வரை உயர்த்தியுள்ளன.அண்டை நாடுகளான வங்கதேசம் எரிபொருள் பங்கீட்டு முறையையும், இலங்கை வாரத்துக்கு நான்கு நாட்கள் மட்டுமே வேலை என்ற முறையையும் அமல்படுத்தியுள்ளன. இலங்கையில் வாரத்தில் நான்கு நாள் பணி நடைமுறை அமல்படுத்தப்பட்டதுடன், ஒவ்வொரு புதன்கிழமையும் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கட்டாய எரிபொருள்பாஸ் முறையையும் அறிமுகப்படு ப்பட்டுள்ளது. பாகிஸ்தான் தனது அரசு அலுவலகங்களை நான்கு நாள் பணி நடைமுறைக்கு மாற்றியுள்ளது.இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 88% இறக்குமதியையே நம்பியிருப்பதால், பொருளாதாரத்தைப் பாதுகாக்க இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை என்று அமைச்சகம் கருதுகிறது. இது குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் மற்றும் புதிய விலைப் பட்டியல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது

## அமெரிக்க கல்லூரியில் பட்டம் பெற்ற 202 மாணவரின் கல்விக் கடனை அடைத்த இந்தியர்!

வாஷிங்டன்::மே.13-

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணம், ராலீ நகரில் வில்சன் காலேஜ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் செயல்படுகிறது. இந்த கல்லூரியில் ஜவுளி தொடர்பான பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன.



கடந்த 8ம் தேதி வில்சன் காலேஜ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இதில் 176 பேர் இளநிலை பட்டங்களையும், 26 பேர் முதுநிலை பட்டங்களையும் பெற்றனர். இந்த விழாவில் இந்திய வம்சாவளி தொழிலதிபர் அனில் கோச்சார் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். விழாவில் பேசிய அவர், இளநிலை பட்டம் பெற்ற 176 பேர் மற்றும் முதுநிலை பட்டம் பெற்ற 26 பேர் என மொத்தம் 202 மாணவ, மாணவியரின் கல்விக் கடனை அடைப்பதாக உறுதி அளித்து, அதற்கான தொகையை வழங்கினார்.

ஒட்டுமொத்தமாக மாணவ, மாணவியரின் ரூ.76.18 கோடி கல்விக் கடனை அவர் அடைத்தார். இதுதொடர்பாக பட்டமளிப்பு விழாவில் அனில் கோச்சார் பேசியதாவது: எனது தந்தை பிரகாஷ் கோச்சார், இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் இருந்து அமெரிக்காவில் குடியேறினார். அவருக்காக வில்சன் காலேஜ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரியின் கதவுகள் திறந்தன.

கடந்த 1950களில் எனது தந்தை இந்த கல்லூரியில் பட்டம் பெற்றார். ஜவுளி துறையில் மிகப்பெரிய தொழிலதிபராக உயர்ந்தார். இந்த கல்லூரிக்கு நானும் எனது குடும்பமும் கடன்பட்டிருக்கிறோம். வில்சன் காலேஜ் ஆப் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவ, மாணவியர் சுதந்திர பறவைகளாக வாழ வேண்டும்.

இதற்காகவே அவர்களின் கடன் சுமையை எங்களது குடும்பம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனது தந்தை இப்போது உயிரோடு இல்லை. அவரது நினைவாக மாணவ, மாணவியரின் கல்விக் கடன்களை அடைக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். இந்திய தொழிலதிபர் அனில் கோச்சாருக்கு அனைத்து மாணவ, மாணவியரும்,கல்லூரி நிர்வாகத்தினரும் மனதார நன்றி தெரிவித்தனர். நியூயார்க் டைம்ஸ் உட்பட அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் அனில் கோச்சாரை பாராட்டி செய்திகளை வெளியிட்டு உள்ளன

## வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழாவை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் ஆய்வு

தேனி மே. 13-

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ளஅருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் சித்திரை பெருந்திருவிழா நடைபெறவுள்ளதையொட்டி, மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். வீரபாண்டியில் அமைந்துள்ள அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12.05.2026 முதல் 19.05.2026 வரை திருவிழா நடைபெற உள்ளது. இத்திருவிழாவில் இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்ய உள்ளார்கள். மேலும், தேரோட்ட திருவிழா 15.05.2025 அன்று நடைபெற உள்ளது.



இத்திருவிழாவில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி தரிசனம் செய்திட ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, தற்காலிக பந்தல்கள், தற்காலிக கழிப்பிட வசதி, தற்காலிக பேருந்து நிலையம், கட்டணமில்லா இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதையும், பக்தர்கள் வசதிக்காக ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதையும், அனைத்து முக்கிய சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் அளவு மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இத்திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்ள இருப்பதால், அவசரகால முதலுதவி சிகிச்சைக்காக பொதுசுகாதாரத்துறையின் சார்பில் இலவச மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதையும் நேரில் பார்வையிட்டார். மேலும், குழந்தைகளுக்கான பொழுது போக்கு அம்சங்களுடன் அமைக்கப்பட்டு வரும் இராட்டினங்கள் மற்றும் தற்காலிக கடைகளை பார்வையிட்டு, அனைத்திற்கும் காப்பீடு (insurance) கட்டாயம் வேண்டும் என்றும், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இராட்டினங்கள் அமைக்கப்பட்டுள்ளதை அலுவலர்கள் உறுதி செய்த பின்னரே அதனை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்துதிருவிழா நடைபெறும் நாட்களில் பக்தர்களுக்கு எந்தஒரு இடையூறும் ஏற்படாத வகையில்,வாகன அனுமதிச்சீட்டு பெற்ற வாகனங்கள் செல்லுக்கூடிய வழித்தடங்கள் மற்றும் பிற வாகனங்கள் செல்லும் வழித்தடங்களை நேரில் பார்வையிட்டு, பின்னர், தேனியிலிருந்து சாலைமார்க்கமாக வீரபாண்டி நோக்கி செல்லுக்கூடிய பக்தர்களின் வசதிக்காக போடேந்திரபுரம் விலக்கில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தினையும், கம்பத்திலிருந்து வீரபாண்டி நோக்கி செல்லும் பக்தர்களின் வசதிக்காக வீரபாண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் எதிரில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண் டார். இவ்வாய்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா பெரியகுளம் சார் ஆட்சியர். ரஜத் பீடன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர். கலைக்கதிரவன், உதவி ஆணையர் (இந்துசமய அறநிலையத்துறை) ஜெயதேவி, உதவி செயற்பொறியாளர். மணிமாறன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், வட்டாட்சியர்(தேனி). சதீஸ்குமார், செயல் அலுவலர்கள். இளங்கோவன், சுபிதா உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



## மானாமதுரை வீர விதை சிலம்பாட்டம்தில் கேரளாவில் மாநில அளவில் சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்றுள்ளனர்

மானாமதுரை.மே.13-
கேரளா மாநிலம் வண்டி பெரியார் அரசு U.P பள்ளியில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பாட்ட போட்டியில் சிவகங்கை மாவட்டம் சார்பாக மானாமதுரை வீரவிதை சிலம்ப மாணவர்கள் மாஸ்டர் கலைவளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் 15 பேர் பங்கேற்றனர். இதில் 10 வயதுக்குட்ப்பட் பிரிவில் ஒற்றைக்கம்பு பிரிவில் மகாசந்தோஷ், சாந்தனு முதலிடத்தையும், சாய் சர்வேஷ்,வாசுதேவன் இரண்டாம் இடத்தையும், ,12 வயதுக்குட்டபட்ட பிரிவில் மதன்குமார், யோவன் அஸ்வா, கிருத்திஷ் முதல் இடத்தையும், ஹரிசுதன் இரண்டாம் இடத்தையும்,14 வயதுக்குட்பட்ட பிரிவில் சித்தார்த், நிரஞ்சன், அரிஸ்வரன் , ராஜ் குமார் ஒற்றைக் கம்பில் முதல் இடத்தையும், பெண்கள் பிரிவில் சஹானாஸ்ரீ , ருத்திகா ஸ்ரீ முதல் இடத்தையும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் யஸ்வந்த் முதல் இடத்தை பெற்று மானா மதுரைக்கும், வீரவிதை. அகாடமிக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். இவர்களை வரவேற்க்கும் விதமாக பெற்றோர்கள் மாலை அணிவித்து, பட்டாசு வெடித்து வரவேற்றனர்..

## டாக்டர்கள் ஸ்டாலின் ராஜா அமலா தம்பதியரின் புதல்வி”தர்ஷ்னா சாய் “ பரதநாட்டிய அரங்கேற்றம்

காரைக்குடி,, மே.13-
காரைக்குடி சி எஸ் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் அமலா கருத்தரிப்பு மையம் டாக்டர்கள் ஸ்டாலின் ராஜா அமலா தம்பதியரின் புதல்வி தர்ஷனா சாய் ன் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி எல் சி டி எல் பழனியப்பா செட்டியார் நினைவரங்கத்தில் நடைபெற்றது. கலைக்கோயில் நாட்டியப்பள்ளி, கலைமாமணி சரளா அம்மையார் ஆசிர்வாதத்துடன், முத்து டான்ஸ் அகாடமி "கலைச்சுடர் மணி " முனைவர் முத்துமாரி இளஞ்செழியன் குழுவினர் முன்னிலையில் தர்ஷ்னா சாய் பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்வு நடந்தது.

இந் நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் கர்னல். க. ரவி , கலைமாமணி பேராசிரியர். ஞானசம்பந்தன், செட்டிநாடு பப்ளிக் பள்ளி சேர்மன் எஸ்.பி. குமரேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பெண் குழந்தை மற்றும் பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முகபாவனை கலந்த நடனத்துடன் தர்ஷ்னா சாய் மேடையில் நிகழ்த்தியதை பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கண்டு ரசித்தனர். டாக்டர்கள் ஸ்டாலின் ராஜா அமலா, வழக்குரைஞர் லெனின் பாரதி பிரகலாதா குடும்பத்தினர் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், அரசியல் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்







■ மதுரை மாவட்டம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 2.27 லட்சம் மதிப்பீட்டில் மருதங்குடி கிராம நிரை ஊரணி அருகில் உள்ள புறம்போக்கு இடத்தில் பெருவாரியான மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., ஆய்வு செய்தார்.

## திருச்சி அருகே பரபரப்பு: மாற்றுத்திறனாளியை கொன்று, எரித்து பின் புதைத்த 6 பேர்

திருச்சி:மே.13-
திருவானைக்காவல் கீழ்கொண்டயம் பேட்டை அருகே மனித மண்டை ஓடு மற்றும் எலும்பு கூடு கிடப்பதாக கடந்த சில நாட்களுக்கு முன்பு போலீசாருக்கு அதிர்ச்சி தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு சென்ற திருவரங்கம் போலீசார் அதனை கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



இந்த சம்பவம் குறித்து திருவரங்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் திருவானைக்காவல் பகுதியை சேர்ந்த வினோத்குமார் என்ற இளைஞர் காணாமல் போனது தொடர்பாக கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு புகார் அளித்ததாக தெரியவந்தது. இதையடுத்து போலீசார் வினோத்குமாரின் குடும்பத்தாரிடம் விசாரணை நடத்தினர்.

மேலும் போலீசார் கண்டெடுத்த எலும்புக்கூட்டை வைத்து ஆய்வு நடத்தி இறந்த நபர் வினோத்குமார் தான் என்று உறுதிபடுத்தினர். பின்னர், வினோத்குமார் இறந்தது எப்படி அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது உயிரை மாய்த்து கொண்டாரா என தனிப்படை போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் அவரை யாரோ பெட்ரோல் ஊற்றி கொலை செய்த்திருக்கலாம் என்று போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.இதையடுத்து வினோத்குமார் காணாமல் போன நாளில் எங்கு இருந்தார் என்று போலீசார் விசாரணை நடத்தினார். மாற்றுத்திறனாளியான வினோத்குமார் பெற்றோரை இழந்து ஜம்புகேஸ்வரர் கோயிலில் யாசகம் பெற்று பிழைப்பு நடத்தி வந்தார். இந்நிலையில் அதே பகுதி சேர்ந்த சிலர் குடிபோதையில் பணம் கேட்டு தகராறு செய்தனர். வினோத்குமார் தர மறுத்ததால் அவர் தலையில் கல்லைப் போட்டு கொலை செய்ததோடு மட்டுமல்லாமல் பெட்ரோல் ஊற்றி உடலை எரித்து விட்டு குழி தோண்டி புதைத்தனர்.இதனை தொடர்ந்து நடத்தப்பட்ட அதே பகுதியை சேர்ந்த ஸ்ரீராம், ராஜ்குமார், ஸ்ரீதர் மற்றும் 3 சிறுவர்கள் என 6 பேர் வினோத்குமாரை கொலை செய்தது தெரிய வந்தது. தற்போது 5 பேரை கைது செய்த போலீசார் தலைமறைவாக உள்ள ஒரு சிறுவனை தேடி வருகின்றனர்

## அமமுகவில் இருந்து காமராஜ் எம்எல்ஏ நீக்கம் தவெகவை ஆதரித்ததால் தினகரன் நடவடிக்கை

சென்னை:மே.13-
‘தவெகவுக்கு தன்னிச்சையாக ஆதரவளித்துள்ள அமமுகவின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காமராஜ், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் அறி வித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காமராஜ், கட்சியின் நிலைப்பாட்டினை மீறி இன்று சட்டப்பேரவையில் தன்னிச்சையாகத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருப்பது கட்சியின் குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணானது.எஸ்.காமராஜின் இன்றைய செயல்பாடு, அவரின் வெற்றிக்காகப் பாடுபட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும், அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மன்னார்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இழைத்திருக்கும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.ஆகவே, கட்சியின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், எஸ்.காமராஜ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் இன்று முதல் நீக்கி வைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.



## “கள்ளழகருக்கு பக்தர்கள் காணிக்கை மழை”சித்திரை விழா உண்டியலில் ரூ.1.09 கோடி வசூல்!

மதுரை, மே.13-
மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் நடைபெற்ற சித்திரை பெருந்திருவிழாவை முன்னிட்டு திருக்கோயில் உண்டியல்கள் திறந்து எண்ணப்பட்டன. இதில் பக்தர்கள் வழங்கிய காணிக்கையாக ரொக்கமாக ரூ.1,09,43,054 வசூலாகியுள்ளது. மேலும், 17 கிராம் பொன்னினமும், 110 கிராம் வெள்ளியினமும் கிடைத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.உண்டியல் கணக்கீட்டு பணியில் திருக்கோயில் இணை ஆணையர் ஹரிஹரன், மதுரை கூடலழகர் திருக்கோயில் உதவி ஆணையர் பிரதிபா, திருப்பரங்குன்றம் ஆய்வர் இளவரசி, தக்கார் பிரதிநிதி சௌமியா, திருக்கோயில் கண்காணிப்பாளர்கள் ரம்யா சுபாஷினி, அருணா தேவி, மக்கள் தொடர்பு அலுவலர் முருகன் உள்ளிட்டோர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



## மதுரையில் தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் வாகனங்களின் பராமரிப்பு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டு ஆய்வு

மதுரை, மே 13-
மதுரை மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் வாகனங்களின் பராமரிப்பு குறித்து ஆயுதப்படை மைதானத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.மாவட்ட ஆட்சித் தலைவர்கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப.. தெரிவித்ததாவது,மதுரை மாநகர், மேலூர், வாடிப்பட்டி ஆகிய பகுதிகளுக்குள் 633 பள்ளிகளை சேர்ந்த 1316 க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் வாகனங்களின் பராமரிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 306 பள்ளி வாகனங்கள் ஏ.ஆர் மைதானத்தில் கொண்டு வரப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பள்ளி வாகனத்திற்கும் அரசாணைக்கிணங்க 16 அம்சங்கள் அமைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாகனங்களில் முதலுதவி பெட்டிகள், வேகக்கட்டுப்பாடு கருவி, தீயணைப்பான்கள் செயல்பாடு, வாகனங்கள் பராமரிப்பு, வாகனங்களில் முன் பின் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் சம்பந்தப்பட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் முதலுதவிப்பெட்டிகள் பயன்படுத்தும் முறை, வாகனங்களை பாதுகாப்பாக இயக்குவது குறித்தும், பள்ளி மாணாக்கர்களின் பாதுகாப்பு குறித்தும், அவசர காலங்களில் அளிக்கப்பட உயிர்காக்கும் சிகிச்சைகள் குறித்தும், அவசரகால சிகிச்சைகள் குறித்தும் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மற்றும் தனியார் மருத்துவமனை குழு மூலமாக பயிற்சி அளிக்கப்பட்டது. அரசு கூறும் அறிவுரைகளை பள்ளி நிர்வாகத்தினர் பின்பற்ற வேண்டும். இந்த ஆண்டு முதல் சிறப்பாக பணியாற்றும் பள்ளி வாகன ஓட்டுநர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விருது வழங்கப்படும் என தெரிவித்தார். பள்ளிகளின் அனுமதியின்றியும், போக்குவரத்துதுறை அனுமதியின்றி மாணவர்களை அழைத்து வரும் ஷேர் ஆட்டோக்கள் விபத்து அதிகரிப்பு புகார் எதிரொலியாக ஷேர் ஆட்டோக்கள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பள்ளிகல்வித்துறை மற்றும் வருவாய்துறை, போக்குவரத்து துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்திவருகின்றனர். தனியார் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மூலமாக இயக்கக்கூடிய வாடகை வாகனங்களும் தலைமை ஆசிரியர் ஒப்புதல் பெற்ற பின்பாக போக்குவரத்து துறை அதிகாரிகளின் அனுமதி பெற்ற பின்பு இயக்கப்படும் எனவும் அவ்வாறு அனுமதி இன்றி வாகனங்கள் இயக்கப்பட்டால் அந்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் மேலும் பெற்றோர்கள் அனைவரும் தன் குழந்தைகளை தாமதப்படுத்தாமல் குறித்த நேரத்தில் பாதுகாப்பாக வாகனங்களில் அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்த ஆய்வில் மாநகர காவல் துணை ஆணையர் (போக்குவரத்து) எஸ்.வனிதா, த.கா.ப., , முதன்மை கல்வி அலுவலர் தயாளன் , வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் சித்ரா (வடக்கு) , பாலமுருகன் (மத்தி) ,கார்த்திகேயன் (தெற்கு) , வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## பொதுமக்களுக்கு இடையூறு செய்தால் நடவடிக்கை: கட்சியினருக்கு தவெக எச்சரிக்கை

சென்னை:மே.13-
பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தவெகவினர் யாரும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது என்றும், கொண்டாட் டங்களில் ஈடுபடக் கூடாது என்றும், மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பாக தவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளி யிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் தமிழக வெற்றிக் கழகம்.



தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்ற, தமிழ்ச் சொந்தங்களின் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் மிகப் பெரிய பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். அதை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும். எனவே, தவெகவினர் யாரும் பிறந்தநாள் விழா மற்றும் குடும்ப விழாக்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளிலோ, மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களிலோ அல்லது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ எங்கும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது. பொதுமக்களுக்கு இடையூறாக எவ்விதக் கொண்டாட்டங்களிலும் யாரும் கண்டிப்பாக ஈடுபடக் கூடாது.பேனர்கள், கொண்டாட்டங்கள் உள்ளிட்ட எவற்றின் வாயிலாகவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் யாரேனும் நடந்துகொண்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் தவெக தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக் கொள்கிறோம்” எனத் தெரி வித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161